# யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

## புலமைப்பரிசில் பரீட்சை - 2012

நேரம் - 45 நிமிடங்கள்

# விசேட பயிற்சிப் பரீட்சை

## வினாத்தாள் - I

**5**

பெயர் :- ..............................................................

- பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
  * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  * உமது சுட்டெண்ணைப் பக்கம் 3 இல் குறித்த இடத்திலும் எழுதுக.
  * இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
  * இலக்கம் 01 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
  * இலக்கம் 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய சரியான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

---

(01) பின்வரும் உரையாடலை நன்கு வாசிக்குக. எனினும் அவை ஒழுங்குமுறையாக எழுதப்படவில்லை. அவை ஒழுங்கு முறையாக இருக்கும் வண்ணம் எழுதியுள்ள விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

A. ஏன் யாருக்காவது சுகமில்லையா? B. என்ன வருத்தம் இருக்கு?
C. ஆ ..... இன்று அதிகாலையில் எங்கே போனீர்கள்? D. அவருக்கு முதுகு வலி இருக்கு.
E. ஆம். எங்களுடைய அப்பாவிற்குச் சுகமில்லை. F. நான் வைத்தியசாலைக்குச் சென்றேன்.

(1) E, B, D, A, C, F (2) C, F, A, E, B, D (3) D, F, C, E, A, B

(02) பின்வரும் ஒவ்வொரு சொல் வரிசையின் தொடர்பின்படி, ஒழுங்குமுறையாக எழுதப்படாத வரிசையைத் தெரிக.

(1) நெல் - அரிசி - சோறு (2) மகன் - அப்பா - பாட்டன் (3) சந்திரன் - சூரியன் - மேகங்கள்

(03) ஒரு மாதத்தின் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாகும். அதன்படி, அம்மாதத்தின் வெள்ளிக்கிழமையானது,

(1) 22 ஆம் திகதியாகும். (2) 16 ஆம் திகதியாகும். (3) 26 ஆம் திகதியாகும்.

(04) சுந்தரலிங்கம் அவர்கள் சாப்பிட முன் உடற் கழுவிக்கொள்வார். விளையாடிய பின் உடற் கழுவுவது சுந்தரலிங்கம் அவர்களின் பழக்கமாகும். அவர் தொலைக்காட்சி பார்ப்பதற்கு முன் சாப்பிடுவார். அதன்படி, அவர் செய்யும் செயல்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,

(1) உணவு உட்கொள்ளல் - தொலைக்காட்சி பார்த்தல் - விளையாடுதல் - உடற் கழுவுதல்
(2) விளையாடுதல் - உடற் கழுவுதல் - உணவு உட்கொள்ளல் - தொலைக்காட்சி பார்த்தல்
(3) உணவு உட்கொள்ளல் - விளையாடுதல் - தொலைக்காட்சி பார்த்தல் - உடற் கழுவுதல்


(05) சுனில் வரிசையொன்றில் நின்றுக்கொண்டிருப்பது முதலிலிருந்து 16 வது நபராகவும், வரிசையின் கடைசியிலிருந்து 9 வது நபராகவும் ஆகும். அதன்படி, வரிசையில் நின்றுக்கொண்டிருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 25 (2) 23 (3) 24

(06) பின்வரும் எண்களின் தொடர்பின்படி, வெற்று வட்டத்திற்கும் வெற்றுக்கூண்டிற்கும் பொருத்தமான எண்களைத் தெரிக.


2 ▲ 3 ■ 2 = 10
1 ▲ 2 ■ 4 = 12
3 ▲ 4 ■ 2 = 14
4 ▲ ○ ■ □ = 18

(1) ② [3] (2) ③ [2] (3) ③ [1]

(07) 




இத்திண்மத்தை A எனும் திசையினூடாகப் பார்த்தால் புலப்படும் முறை,

(1)  (2)  (3) 

(08) "மஞ்சள் நிறக் கோட்டினூடாக வீதியைக் குறுக்காகக் கடக்கும்போது விபத்துக்கள் ஏற்படுவதில்லை." இக்கூற்று,

(1) எப்போதும் உண்மையானது. (2) பெரும்பாலும் உண்மையானது. (3) சிலநேரம் உண்மையானது.

(09) 

இங்கு நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின்,

(1) $\frac{1}{4}$ பங்காகும். (2) $\frac{1}{2}$ பங்காகும். (3) $\frac{1}{3}$ பங்காகும்.



kalvi.lk

(10) A - மழை பெய்யும். B - கடல் வற்றும். C - பூமியதிர்ச்சி ஏற்படும்.

மேலே A, B, C களினால் கூறப்படும் விடயங்களில் நாளை ஒருபோதும் நிகழ முடியாதது,

(1) A (2) B (3) C


(11) பின்வரும் கூற்றுக்களுள் பிழையான கருத்தையுடைய வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) வௌவால் ஒரு பாலூட்டியாகும். அதற்கு பறக்க முடியும்.


(2) நீர் மனிதனுக்குப் பயன்படும். மழையினால் எமக்கு நீர் கிடைக்கும்.

(3) மாடு மனிதனுக்கு பயனுள்ள ஒரு பிராணியாகும். அது ஓர் அனைத்துமுண்ணியாகும்.

(12)




(13)



இப்பெரிய சதுரமுகியின் ஆறு முகங்களிலும் வர்ணந்தீட்டி, புள்ளிக்கோடுகளின் வழியே ஒரேயளவான சிறிய சதுரமுகிகளாக வெட்டப்பட்டன. அதன்படி, வெட்டிய பின் மூன்று முகங்களில் மாத்திரம் வர்ணந்தீட்டப்பட்டிருந்த சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 8 (2) 4 (3) 9

(14) ஓர் ஓட்டப்போட்டியில் பங்குபற்றிய மூன்று போட்டியாளர்களும் போட்டியை நிறைவு செய்த முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

சச்சின் - வசீமை விட 5 நிமிடங்களுக்குப் பின்

ராஜா - சச்சினை விட 10 நிமிடங்களுக்குப் பின்

வசீம் - ராஜாவை விட 15 நிமிடங்களுக்கு முன்

அதன்படி, போட்டியில் 1, 2, 3 ஆம் இடங்களைப் பெற்ற போட்டியாளர்களின் பெயர்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,


(1) சச்சின், வசீம், ராஜா (2) ராஜா, சச்சின், வசீம் (3) வசீம், சச்சின், ராஜா

(15) முதலில் தந்துள்ள இரண்டு சொற்களுக்கும் இடையில் ஏதோவொரு தொடர்புள்ளது. அதன்படி, அதுபோன்ற தொடர்புள்ள இரண்டு சொற்களையும் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்துத் தெரிக.

**புத்தகத்திற்கு - பக்கம் எனின்,**

(1) கடலிற்கு - மீன் (2) மேசைக்கு - கால் (3) காட்டிற்கு - மரம்


(16) பின்வரும் உருக்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.





இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) AE, BF, CD (2) BE, AD, CF (3) DF, AC, BE

(17)



இவ்வுருவை அம்புக்குறி காட்டும் திசையினூடாகப் பார்த்தால் புலப்படும் முறை,




(1) (2) (3)

(18) பின்வரும் கார்ட்போட் அட்டைகளில் எழுதப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியினூடாகப் பார்க்கும் போது அதே முறையில் புலப்படும் ஆங்கில எழுத்துக்களின் வரிசை,

(1) V U X B (2) A I H O (3) S T W Y


(19)




இவ்வட்டத்தின் மீது உள்ள A, B, C, D, E எனும் புள்ளிகளை நேர்கோடுகளின் மூலம் தொடர்புபடுத்தினால் வரையக்கூடிய மிகக்கூடிய நேர்கோடுகளின் எண்ணிக்கை,

(1) 10 (2) 8 (3) 9


(20)



அகற்றப்பட்ட பகுதி


சதுர வடிவக் கடதாசியொன்றை நான்காக மடித்து, முக்கோண வடிவப் பகுதியொன்று அகற்றப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகின்றது. அதன்படி, அந்த சதுர வடிவான கடதாசியை விரித்துப் பார்த்தால் அது புலப்படும் முறையானது,

(1) (2) (3)





kalvi.lk

(21) 

சுட்டெண் :- ..........................................

இவ்வுருவில் மெழுகுவர்த்தியின் ஒளியினால் உண்டான நிழலை வரைந்துள்ள முறை

(1) சரியானது. (2) பிழையானது. (3) கூறமுடியாது.


(22) ராஜாவினதும் கீதாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 56 வருடங்கள் ஆகும். கீதாவினதும் ரமாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 52 வருடங்கள் ஆகும். ராஜாவினதும் கீதாவினதும் ரமாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 76 வருடங்கள் ஆகும். அதன்படி, கீதாவின் வயது,

(1) 30 வருடங்கள் (2) 26 வருடங்கள் (3) 32 வருடங்கள்

(23) □ X □ = △, △ + △ = ○ அதன்படி, ○ எனும் குறியீட்டின் பெறுமதியாக இருக்கக்கூடியது,

(1) 9 (2) 8 (3) 12

(24)




பிள்ளையொன்று உருவில் காட்டியுள்ள முறையில் 4 கூண்டுகள் முன்னால் பாய்ந்து 2 கூண்டுகள் பின்னால் பாய்ந்தது. மீண்டும் 4 கூண்டுகள் முன்னால் பாய்ந்து 2 கூண்டுகள் பின்னால் பாய்ந்தது. அவர் முதல் தடவை பாய்ந்தது 5 வது கூண்டிற்கு எனின், அவர் 11 வது கூண்டிற்கு எத்தனையாவது தடவையில் பாய்வார்?

(1) 7 வது தடவையில் (2) 6 வது தடவையில் (3) 8 வது தடவையில்

(25) பெட்டியொன்றில் 3 வெள்ளை நிறப் பந்துகளும், 3 நீல நிறப் பந்துகளும் உள்ளன. பிள்ளையொன்று இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு ஒரு தடவையில் இரண்டு பந்துகள் வீதம் வெளியே எடுத்தது. அவருக்கு கட்டாயமாக இரண்டு வர்ணங்களிலும் இரண்டு பந்துகள் கிடைப்பது,

(1) முதலாவது தடவையிலாகும். (2) இரண்டாவது தடவையிலாகும். (3) மூன்றாவது தடவையிலாகும்.

(26) நீலாவின் வீடு இருப்பது சரியாக பாடசாலைக்கு முன்னாலாகும். அவள் இன்று பாடசாலைக்கு வரவில்லை. அதற்குக் காரணமாக இருக்கக்கூடியது,

(1) பாடசாலைப் பேருந்து வரவில்லை என்பதனாலாகும்.

(2) இன்று பாடசாலை விடுமுறை நாள் என அவள் நினைத்ததனாலாகும்.

(3) அவளுக்கு இன்று காய்ச்சல் ஏற்பட்டதனாலாகும்.


(27) பின்வரும் வாக்கியத்தில் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களையுடைய விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

கிரிக்கெட் .................................. (1. பயிற்றுவிப்பாளர் 2. விளையாட்டு வீரர் 3. பார்வையாளர்) ஆட்டமிழந்ததை .................................. (1. மத்தியஸ்தர் 2. தலைவர் 3. பந்து வீச்சாளர்) தீர்மானித்ததையடுத்து வேறு விளையாட்டு வீரர் மைதானத்தின் நடுவே வந்தார்.

(1) பயிற்றுவிப்பாளர், தலைவர்

(2) விளையாட்டு வீரர், மத்தியஸ்தர்

(3) விளையாட்டு வீரர், பந்து வீச்சாளர்

(28) 


இவ்வுருவில் காட்டப்படுவது, 5 திண்மங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ள முறையாகும். அதன்படி, மிகக்குறைந்த எண்ணிக்கையான முகங்கள் வெளியே தெரியும் திண்மம்,

(1) E (2) B (3) D

(29) சமனின் அப்பா வீட்டிற்கு அருகிலுள்ள விற்பனை நிலையத்திற்குச் சென்று ஒரு கிலோகிராம் சீனியின் விலையை வியாபாரியிடம் கேட்டு, 250 கிராம் சீனியை வாங்கினார். இதற்குக் காரணமாக இருக்கக்கூடியது,

(1) 1kg சீனியை வாங்குவதற்குத் தேவையான பணம் அவரிடம் இல்லாமையினாலாகும்.

(2) சீனியைக் கூடுதலாக உட்கொள்வது உடலுக்குத் தீங்கானதனாலாகும்.


(3) நீண்ட நாட்களுக்கு சீனியை வீட்டில் வைத்துக்கொள்ள முடியாமையினாலாகும்.

(30) 20 ஆம் நூற்றாண்டில் 7 வது தசாப்தத்திற்குரிய ஒரு வருடம்,

(1) 2070 (2) 1975 (3) 1965




kalvi.lk

(31) 


நேரம் 4 கழிந்து 50 நிமிடங்களைக் காட்டும் சந்தர்ப்பத்தில் இக்கடிகாரத்தின் மணித்தியால முள், நிமிட முள் என்பன அமைந்திருப்பது,

(1) மணித்தியால முள் E இற்கு அண்மையிலும் நிமிட முள் K இற்கு நேராகவும் ஆகும்.
(2) மணித்தியால முள் F இற்கு அண்மையிலும் நிமிட முள் K இற்கு நேராகவும் ஆகும்.
(3) மணித்தியால முள் E, F களிற்கு சரி நடுவிலும் நிமிட முள் L இற்கு நேராகவும் ஆகும்.

(32) சுனில் அதிகாலையிலேயே எழும்புவான். உடற்பயிற்சி செய்வான். விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவான். அநேகமான போட்டிகளில் அவன் முதலிடத்தைப் பெற்றுக்கொள்வான். அதன்படி அவன்,


(1) முயற்சியுடையவன் (2) பாடசாலை மாணவன் (3) புத்தியுடையவன்

(33) A போத்தலில் 123 இனிப்புக்கள் உள்ளன. B போத்தலில் 87 இனிப்புக்கள் உள்ளன. இரண்டு போத்தல்களிலுமுள்ள இனிப்புக்களின் எண்ணிக்கை சமனாவதற்காக A போத்தலிலிருந்து B போத்தலிற்கு இடவேண்டிய இனிப்புக்களின் எண்ணிக்கை,

(1) 36 (2) 18 (3) 20

(34) ஒரு மனிதன் பயணமொன்றின் $\frac{4}{7}$ பங்கைப் பேருந்திலும், $\frac{2}{7}$ பங்கை ஈருருளியிலும், மீதித் தூரத்தை நடந்தும் பயணித்தான். அவன் நடந்து பயணித்தத் தூரம் 5 கிலோமீற்றர் எனின், அவன் பயணித்த மொத்தத் தூரம்,

(1) 30km (2) 32km (3) 35km

(35) 

அறையொன்றின் நிலத்திற்கு சதுரவடிவான 5 மாபிள்கள் பிடிக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, அறையிற்குப் பிடிப்பதற்காக இன்னும் எத்தனை மாபிள்கள் தேவைப்படும்?

(1) 24 (2) 20 (3) 16

● பின்வரும் ஒவ்வொரு வினாவிற்குமுரிய விடையை வெற்றிடத்தில் எழுதுக.

(36) கரப்பான் பூச்சி, பூனை, எறும்பு, எருது, தவளை

மேலே ஒவ்வொரு பிராணியின் பெயரையும் அதன் உடலின் பருமனுக்கேற்ப குறைந்த அளவிலிருந்து, கூடிய அளவு வரை மீண்டும் ஒழுங்குபடுத்தி எழுதுக.

Education கல்வி அடியாபன

.............................................................................................................................

(37) 


ராஜா பாடசாலையிலிருந்து வீட்டிற்குப் பயணித்த திசைகளை மேலுள்ள உரு காட்டுகிறது. அதன்படி, அவன் பிரதான நான்கு திசைகளிலும் மிகக்குறைந்த தடவை பயணித்துள்ள திசை யாது?

.............................................................................................................................

(38)

$$\begin{array}{r} AB \\ +\ BB \\ \hline 186 \\ \hline \end{array}$$


இப்பிரசினத்தில் A, B களினால் காட்டப்படுபவை தனி இலக்க எண்களாகும். அதன்படி, A யினால் காட்டப்படும் எண் யாது?

.............................................................................................................................

(39) 


மேலே உருவில் காட்டப்படுவது தேசப்படமொன்றின் A, B, C, D எனும் நகரங்கள் அமைந்துள்ள முறையாகும். அந்நகரங்களுக்கிடையிலுள்ள தூரங்களை அருகிலுள்ள அட்டவணை காட்டுகின்றது. அதன்படி, வெற்றுக்கூண்டிற்குப் பொருத்தமான எண்ணை வெற்றுக்கூண்டினுள்ளேயே எழுதுக.

| A | | | |
|---|---|---|---|
| 6 | B | | |
| 11 | 5 | C | |
| | 14 | 9 | D |

(40) 


பிள்ளையொன்று B பாத்திரத்தைப் பூரணமாக நிரப்பி பல தடவைகள் A பாத்திரத்திற்கு நீர் ஊற்றியது. அதன்படி, A பாத்திரம் பூரணமாக நிரம்பிய சந்தர்ப்பத்தில் B பாத்திரத்தில் மீதியாக இருந்த நீரின் அளவு யாது?

.............................................................................................................................



kalvi.lk